# Unreciprocated Sexual Love (Kaikilai):- From Tolkappiyam To The Present Time

**Dr. K. Sankara Narayanan**
*Assistant Professor& Head (i/c), Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358334

**Abstract**

*The Tolkappiyam lists seven agathinai in the porulathikaramagathinaiyiyal. It arranges the agathinai in the order of Kaikkilai, Kurinji, Mullai, Marutham, Neithal, Palai, and Perunthinai. Of these, the five from Kurinji to Palai are called the five agathinai of love. Kaikkilai is called a head love and Perunthinai is called unrequited love. Kai in Kaikkilai means discipline. This word is taken in the sense of boundless, unrequited love that appears only in someone, between a hero and a heroine. The purpose of this article is to present the records related to unreciprocated sexual(Kaikkilai) recorded in Tamil literature and grammars such as Tolkappiyam, Sangam literature, and Silappadhikaram, and to identify and discuss the changes that have occurred in the characteristics of unreciprocated sexual(Kaikkilai)with the passage of time and development.*

***Keywords :*** *Unreciprocated sexual(Kaikkilai), Tholkappiyam, Sangam Literature, Silappathikaram, Purappporul Venpamaalai, Periyapuranam, Thirupuzhal, Kalladam, Bharathiar*

**References**

1. Elampooranar Urai.2010,TholkappiyaPorulathikaaramMoolamumUraium, Chennai, Saratha Publication
2. Kovinthrasa Mudahaliyar, Ka.Ra, Akapporul Vilakkam, 2002, Chennai, Saivasidhanda Noorpathippuk Kalagam
3. Sangam Literature, Ettuthogai - Vol I, 2014, Chennai New Century Book House
4. Sangam Literature, Ettuthogai - Vol II, 2014, Chennai New Century Book House
5. Sangam Literature, Ettuthogai - Vol III, 2014, Chennai New Century Book House
6. Sangam Literature Patthupattu - Vol I, 2014, Chennai New Century Book House
7. Sangam Literature Patthupattu - Vol II, 2014, Chennai New Century Book House
8. Subramaniam.Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication
9. Saomasundaranar, Po.Ve.Purapporul Venpamalai (Vilakkavurai), 2002, Chennai,
10. Saivasidhanda Noorpathippuk Kalagam
11. Tamillannal, TholkappiyamEzhuthathikaaram, Vol – I, 2006, Chennai, Manivasagar Publications
12. Tamillannal, TholkappiyamCholathikaaram, Vol – II, 2006, Chennai, Manivasagar Publications
13. Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol – III, 2006, Chennai, Manivasagar Publications
14. Bharathiyar Kavithaigal, 2017, Chennai, Poompukar Pathippakam
15. Perachiriyarin Urai, Tholkappiyam Porullathikaaram, 2017, Chennai, Amaravathi Publication

# கைக்கிளை:- தொல்காப்பியம் முதல் தற்காலம் வரை

***முனைவர் கி. சங்கரநாராயணன்***
துறைத்தலைவர் (பொ.), தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***

*தொல்காப்பியம் பொருளதிகார அகத்திணையில் அகத்திணைகளை ஏழாகக் கூறுகின்றது. கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்ற வரிசை முறையில் அகத்திணையினை வரிசைபடுத்துகின்றது. இவற்றில் குறிஞ்சி முதல் பாலை வரையிலான ஐந்திணையினை அன்பின் ஐந்திணை என்கிறது. கைக்கிளை என்பதை ஒருதலைக் காதல் என்றும் பெருந்திணையினைப் பொருந்தாக் காமம் என்றும் கூறுகிறது. கைக்கிளை என்பதில் கை என்பது ஒழுக்கம் என்ற பொருளைக் குறிக்கும். தலைவன் மற்றும் தலைவியிடத்தில் யாரேனும் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றும் அளவற்ற, ஈடு இணையற்ற காதல் என்ற பொருளில் இச்சொல் எடுத்தாளப்படுகிறது. தொல்காப்பியம், சங்கஇலக்கியம், சிலப்பதிகாரம் ஆகிய தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் பதிவாகியுள்ள கைக்கிளை தொடர்பான பதிவுகளை எடுத்துரைப்பதும், காலமாற்றம் மற்றும் வளர்ச்சியில் கைக்கிளையின் செல்நெறிகளில் அடைந்துள்ள மாற்றத்தை இனம்கண்டு உரைப்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *கைக்கிளை, தொல்காப்பியம், சங்கஇலக்கியம், சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, பெரியபுராணம், திருப்புகழ், கல்லாடம், பாரதியார்*

**தொல்காப்பியம்**

***கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்***
***முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல்.பொருள்.1)***

எனத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இயலான அகத்திணையியலின் தொடக்கமே கைக்கிளை என்ற சொல்லால் தொடங்கப்படுகிறது. கைக்கிளை ஒழுக்கம் சிறுபான்மையோர் ஒழுக்கம் என்று தொல்காப்பியத்துக்கு உரை எழுதும் இளம்பூரணர் குறிப்பிடுகிறார் தொல்காப்பியம் முதலாகத் தற்கால இலக்கியம் வரையிலான தமிழ் இலக்கிய மற்றும் இலக்கணங்களில் பதிவாகியுள்ள கைக்கிளை தொடர்பான பதிவுகள் பின்வருமாறு:

***காமம் சாலா இளமை யோள்வயின்***
***ஏமம் சாலா இடும்பை எய்தி***
***நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தான்***
***தன்னொடும் அவெளாடும் தருக்கிய புணர்த்துச்***
***சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்***
***புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே (தொல்.பொருள்.53)***

அகத்திணையல்லாமல், புறத்திணையியல், களவியல், செய்யுளியலிலும் கைக்கிளை தொடர்பான பதிவுகளைக் காணமுடிகின்றது.

***பாடாண் பகுதி கைக்கிளை புறனே***
***(தொல்.பொருள்.புறம்.25:1)***
***கைக்கிளை வகையொடு உளப்பட தொகைஇ***
***(தொல்.பொருள்.புறம்.35:10)***
***முன்னைய மூன்றும் கைக்கிளை குறிப்பே***
***(தொல்.பொருள்.களவு.14:1)***
***கைக்கிளை பரிபாட்டு அங்கத செய்யுளொடு***
***(தொல்.பொருள்.செய்.118:2)***
***கலி வெண்பாட்டே கைக்கிளை செய்யுள்***
***(தொல்.பொருள்.செய்.160:1)***
***கைக்கிளை முதலா எழுபெரும் திணையும்***
***(தொல்.பொருள்.செய்.185:1)***

### சங்க இலக்கியம்

*சங்க இலக்கியமான பரிபாடலில் கைக்கிளை என்ற சொல்லின் வருகையினைக் காண முடிகின்றது.*

***இன்ன பண்பின் நின் தைநீராடல்***
***மின் இழை நறுநுதல் மகள் மேம்பட்டது***
***கன்னிமை கனியா கைக்கிளை காம***
***இன் இயல் மாண் தேர்ச்சி இசை பரிபாடல்***
***(பரிபாடல் 11:134-137)***

*இத்தகைய சிறப்புமிக்க உனது தை நீராடலானது, மின்னுகின்ற அணிகலன்களையும் நறுமணம் கமழும் நெற்றியையும் உடைய பெண் ஒருத்தி, தன் பெண்தன்மை மேம்பட்ட கன்னித்தன்மை முதிராத ஒருதலைக் காதலின் காமத்தின் இனிய தன்மையினையும், சிறந்த தேர்ச்சியினையும் கொண்ட இசையோடு கூடிய பரிபாடலே எனப் பாடப்படுகிறது.*

### புறப்பொருள் வெண்பாமாலை

*புறப்பொருள் வெண்பாமாலை புறத் திணையினைப் பன்னிரெண்டு வகைகளாகப் பிரிக்கின்றது. அவற்றில் பதினொன்றாவது திணையாகக் கைக்கிளையினை வைத்துள்ளது. கைக்கிளையினை இரண்டு வகையாகப் பிரிக்கின்றது. ஒன்று ஆண்பாற் கூற்று கைக்கிளை மற்றொன்று பெண்பாற் கூற்று கைக்கிளை.*

***காட்சி யையந் துணிவே யுட்கோள்***
***பயந்தோர்ப் பழிச்ச நலம் பாராட்டல்***
***நயப்புற் றிரங்கல் புணர விரக்கம்***
***வெளிப்பட விரத்த லெனவிவ் வொன்பதும்***
***ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.***
***(புறப்பொருள் வெண்.நூற்.14)***

*காட்சி, ஐயம், துணிவு, உட்கோள், பயந்தோர்ப்பழிச்சல், நலம்பாராட்டல், நயப் புற்றிரங்கல், புணராவிரக்கம், வெளிப்பட இரத்தல் ஆகிய ஒன்பதும் ஆண்பால் கூற்றுக் கைக்கிளையாகும்.*

***காண்ட னயத்த லுட்கோண் மெலிதல்***
***மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்***
***பகன்முனி வுரைத்த லிரவுநீடு பருவரல்***
***கனவி நரற்ற நெஞ்சொடு மெலிதல்***
***பெண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்***
***(புறப்பொருள் வெண்.நூற்பா.13)***

*காண்டல், நயத்தல், உட்கோள், மெலிதல், மெலிவொடுவைகல், காண்டல்வலித்தல், பகல் முனிவு உரைத்தல், இரவு நீடுபருவரல், கனவில் அரற்றல், நெஞ்சொடுமெலிதல் ஆகியவை பெண்பாற் கூற்றுக் கைக்கிளையாகும்.*

### நம்பியகப்பொருள்

*நம்பியகப்பொருளில் ஐந்து இடங்களில் வரப்பெற்றுள்ள கைக்கிளை தொடர்பான வரிகள் பின்வருமாறு,*

***மலர்தலை யுலகத்துப் புலவோர் ஆய்ந்த***
***அரும் தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை***
***பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்***
***(நம்பியகம்.1:1)***
***கைக்கிளை உடையது ஒருதலை காமம்***
***(நம்பியகம். 1:3/2)***
***கைக்கிளை நிகழ்தல் கடன்என மொழிப***
***(நம்பியகம். 1:28/2)***
***மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை***
***(நம்பியகம்.2:2/2)***
***இறப்ப கூறுவது அகப்புற கைக்கிளை***
***(நம்பியகம். 5:32/3)***

### சிலப்பதிகாரம்

*சிலப்பதிகாரத்தில் ஏழு இடங்களில் கைக்கிளை என்ற குறிப்பினைக் காணமுடிகின்றது.*

*மெய் கிளை நரம்பில் கைக்கிளை கொள்ள*
*(சிலம்பு. புகார். 3:74)*
*கைக்கிளை ஒழிந்த பாகமும் பொற்புஉ டை*
*(சிலம்பு. புகார். 3:75)*
*மேலது உழையுளி கீழது கைக்கிளை*
*வம்பு உறு மரபின் செம்பாலை ஆயது*
*(சிலம்பு. புகார். 3:80,81)*
*காந்தள் மெல்விரல் கைக்கிளை சேர்குரல்*
*(சிலம்பு. புகார். 7:222)*
*உழை முதல் கைக்கிளை இறுவாய் கட்டி*
*(சிலம்பு. புகார். 8:32)*
*உழை முதல் கைக்கிளை இறுவாய் கட்டி*
*(சிலம்பு. மதுரை. 13:109)*
*கைக்கிளை உழை இளிவிளரி தாரம் என*
*(சிலம்பு. மதுரை. 17:55)*
*கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள் வலத்து உளாள்*
*(சிலம்பு. மதுரை. 17:63)*

**பெரியபுராணம்**

*காதல் புரி கைக்கிளையால் பாடியே கலந்து அணைவார்*
*(6.வம்பறா:2 305:4)*

**திருப்புகழ்**

*ப்ரிதி ஒக்க ஒழிந்து கைக்கிளை துத்தம் குரல் ஆதி*
*(திருப்:317:10)*

**கல்லாடம்**

*துத்தம் கைக்கிளை அளவையின் விளைப்ப*
*(கல்லாடம்:2 38:15)*
*துத்தம் தாரம் கைக்கிளை அதனுக்கு*
*(கல்லாடம்:2 100:25)*

**பாரதியார்**

*கைக்கிளை பெயர்கொண்ட பெரும் துயர்*
*காதல் அஃது கருதவும் தீயதால்*
*(சுயசரிதை:16:4)*
*தேவர் மன்னன் மிடிமையை பாடல் போல்*
*தீய கைக்கிளை யான் எவன் பாடுதல்*
*(சுயசரிதை:1 17:1)*

**தொகுப்புரை**

தொல்காப்பியம் முதலாகத் தற்கால இலக்கியமான பாரதியின் சுயசரிதை வரையிலான இலக்கண மற்றும் இலக்கியங்களில் கைக்கிளை என்ற சொல்லின் வருகையினை மேற்கண்ட பதிவுகளின் வழியாகக் காண முடிகின்றன. கைக்கிளை என்பது சிறுபான்மை மக்களுக்கான ஒழுக்கமாகவும் அன்பின் ஐந்திணை ஒழுக்கம் என்பது பெருபான்மை சமூகத்துக்கான ஒழுக்கமாகவும் இருப்பதையும் அறியலாம். சிறுபான்மையாக இருப்பினும் அதனையும் ஏற்றுக்கொண்டு இலக்கணிகள் இலக்கியம் படைத்த பாங்கினையும் இதன்வழி அறியமுடிகின்றது. தற்காலங்களில் கைக்கிளை என்ற சொல் ஒன் சைடு லவ் என்ற தற்கால வழக்கில் சொல்லப்படுகிறது. அற்றைக் காலத்தில் மடலேறுவேன் என்று தலைவன் தலைவியை மிரட்டியதாக இலக்கியங்கள் கூறுகின்றன. எந்த ஒரு இலக்கியத்திலும் மடலேறியதான பதிவினைக் காணமுடியவில்லை. தற்காலத்தில் இந்தக் கைக்கிளையினை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் திராவம் வீச்சு, உயிரை மாய்த்தல், உயிரை எடுத்தல் போன்ற விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துகின்றனர் என்பதும் இங்கு நினைக்கத்தக்கது. மரபார்ந்த இலக்கியக் கோட்பாடுகளில் பல, தற்காலத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத மற்றும் பின்பற்ற முடியாதவையாக இருப்பதையும் இதன்வழியாக அறியமுடிகின்றது. இதுபோன்ற இலக்கியக் கோட்பாடுகள் தற்காலம் வரையில் எங்ஙனம் மாற்றம் பெற்றுள்ளது? வளர்ச்சி அடைந்துள்ளது? வழக்கில் இல்லாதவையாகியுள்ளது என்பதை அறிவதும் இனம் காண்பதும் எடுத்துரைப்பதும் காலத்தின் தேவையாக அமையும்.

**துணை நூற்பட்டியல்**

1. இளம்பூரணர்உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்
2. கோவிந்தராச முதலியார், கா.ரா, அகப்பொருள் விளக்கம், 2002,சென்னை, வைச சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
3. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்

4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
5. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
6. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
7. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
8. சுப்ரமணியம். ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
9. சோமசுந்தரனார், பொ.வே., புறப்பொருள் வெண்பாமாலை (விளக்கவுரை), 2002, சென்னை, வைச சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
10. தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தொகுதி 1, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
11. தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி - 2, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
12. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
13. பாரதியார் கவிதைகள், 2017, சென்னை, பூம்புகார் பதிப்பகம்
14. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், 2017, சென்னை, அமராவதி பதிப்பகம்